# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - கிளரொளி
## கீழ் நிஷ்கர்ஷித்த புருஷார்த்தத்தைப் பெறும் பொருட்டுத் திருமாலிருஞ்சோலை மலையை ஆச்ரயிக்கும்படி பிறர்க்கு உபதேசித்தல்

** கிளர் ஒளி இளமை * கெடுவதன் முன்னம் *
வளர் ஒளி மாயோன் * மருவிய கோயில் **
வளர் இளம் பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *
தளர்வு இலர் ஆகிச் * சார்வது சதிரே 1

சதிர் இள மடவார் * தாழ்ச்சியை மதியாது *
அதிர் குரல் சங்கத்து * அழகர் தம் கோயில் **
மதி தவழ் குடுமி * மாலிருஞ்சோலை *
பதி அது ஏத்தி * எழுவது பயனே 2

பயன் அல்ல செய்து * பயன் இல்லை நெஞ்சே! *
புயல் மழை வண்ணர் * புரிந்துறை கோயில் **
மயல் மிகு பொழில் சூழ் * மாலிருஞ்சோலை *
அயல் மலை அடைவது * அது கருமமே 3

கரும வன் பாசம் * கழித்து உழன்று உய்யவே *
பெரு மலை எடுத்தான் * பீடுறை கோயில் **
வரு மழை தவழும் * மாலிருஞ்சோலை *
திருமலை அதுவே * அடைவது திறமே 4

திறம் உடை வலத்தால் * தீ வினை பெருக்காது *
அறமுயல் ஆழிப் * படையவன் கோயில் **
மறுவில் வண் சுனை சூழ் * மாலிருஞ்சோலை *
புற மலை சாரப் * போவது கிறியே 5

கிறி என நினைமின் * கீழ்மை செய்யாதே *
உறி அமர் வெண்ணெய் * உண்டவன் கோயில் **
மறியொடு பிணை சேர் * மாலிருஞ்சோலை *
நெறி பட அதுவே * நினைவது நலமே 6

நலம் என நினைமின் * நரகு அழுந்தாதே *
நிலமுனம் இடந்தான் * நீடுறை கோயில் **
மலமறு மதி சேர் * மாலிருஞ்சோலை *
வலமுறை எய்தி * மருவுதல் வலமே 7

வலம் செய்து வைகல் * வலம் கழியாதே *
வலம் செய்யும் * ஆய மாயவன் கோயில் **
வலம் செய்யும் வானோர் * மாலிருஞ்சோலை *
வலம் செய்து நாளும் * மருவுதல் வழக்கே 8

வழக்கென நினைமின் * வல்வினை மூழ்காது *
அழக்கொடி அட்டான் * அமர் பெரும் கோயில் **
மழக் களிற்றினம் சேர் * மாலிருஞ்சோலை *
தொழக் கருதுவதே * துணிவது சூதே 9

சூது என்று களவும் * சூதும் செய்யாதே *
வேத முன் விரித்தான் * விரும்பிய கோயில் **
மாதுறு மயில் சேர் * மாலிருஞ்சோலை *
போது அவிழ் மலையே * புகுவது பொருளே 10

** பொருள் என்று இவ்வுலகம் * படைத்தவன் புகழ் மேல் *
மருள் இல் வண் குருகூர் * வண் சடகோபன் **
தெருள் கொள்ளச் சொன்ன * ஓர் ஆயிரத்துள் இப்பத்து *
அருள் உடையவன் தாள் * அணைவிக்கும் முடித்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---